Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    மார்கழி 20    (04-01-1993)    திங்கட்கிழமை    ஓசை 321

## விடைத்தாள் மீளாய்வு இறுதித் திகதி அறிவிப்பு

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை விடைத் தாள்களை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு பரீட்சைத் திணைக்களம் கேட்டுள்ளது. விண்ணப்பம் செய்வதற்கான கடைசி நாள் இம்மாதம் 25 ஆம் திகதியாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வரை யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேரவில்லை என்பது தெரிந்ததே. க. பொ. த. (சாதாரணதர) பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் இன்றுடன் பூர்த்தியடைய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் க. பொ த. (சாதாரணதர) யாழ். குடாநாட் (4 ஆம் பக்கம் பார்க்க)

# பயணிகள் படகுகள் மீது கடற்படை தாக்கு

# 15 பொதுமக்கள் படுகொலை: பலர் படுகாயம்

## கிளாலிக் கடலில் கோர சம்பவம்

[நமது நிருபர்]

கிளாலிக் கடற்பரப்பில் மூன்று பயணிகள் படகுமீது சிறிலங்கா கடற்படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட தாக்குதலில், ஆறு பெண்கள் உட்பட பதினைந்து பொது மக்கள் கொல்லப்பட்டனர். ஆறுபேர் படுகாயமடைந்தனர். மேலும் பலரைக் காணவில்லை எனவும் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் இரவு சுமார் 7-30 மணியளவில் இக்கோரச் சம்பவம் இடம்பெற்றது. கிளாலியில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு ஆலங்கேணிக்குச் சென்று கொண்டிருந்த படகுகளே கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானது.

இச்சம்பவத்தில் அதிஷ்டவசமாக உயிர் தப்பிய சுந்தையா செல்லத்துரை [68] எமது நிருபருக்குத் தகவல் தருகையில், தமது படகை அண்மித்த கடற்படையினர் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், இதில் தனது மனைவி பலியானதாகவும் தெரிவித்தார். இதே போன்றே ஏனைய படகுகள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின்னர் மூன்று படகையும் கடற்படைப்படகு கட்டி இழுத்துச் சென்றதாகவும், இடையில் தமது படகு கட்டியிருந்த கயிறு அறுந்ததினால் தாம் கரையை அடையமுடிந்தது எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை. இத்தாக்குதலுக்கு உள்ளான படகில் பயணம் செய்த கொக்குவிலைச் சேர்ந்த ஒருவர் கடற்படையினர் தாக்கிய போது கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்த

[4ஆம் பக்கம் பார்க்க]

## கடற்படை தாக்குதலுக்கு பலியான 9 பேர் விபரம்

[கிளிநொச்சி]

கிளாலி கடற்பரப்பில் வைத்து நேற்று முன் தினம் இரவு சிறிலங்கா கடற்படையினரால் கொடூரமான முறையில் வெட்டியும்சுட்டும் கொல்லப்பட்டவர்களில் ஒன்பது பேரின் பெயர் விபரங்கள் வருமாறு.

★ செல்லத்துரை சுப்பிரமணியம் [ஓய்வுபெற்ற பொலிஸ் சாரதி- கொடிகாமம்]

★ சதாசிவம் பாலசுப்பிரமணியம் [பேக்கரி உரிமையாளர் கொடிகாமம்]

★ அருணாசலம் பொன்னம்மா [வயது 35 கலட்டி பண்டத்தரிப்பு]

★ ஆறுமுகம் தர்மராசா வயது 51- நுணாவில் கிழக்கு சாவகச்சேரி] இவர் கிளிநொச்சி கல்வி அதிகாரி ஆவார்.

★ விஸ்வலிங்கம் செல்லத்துரை [வயது 38- நாவற்காடு வறணி] இவர் மன்னார் நீதிமன்ற ஊழியராவார்.

★ கோபாலபிள்ளை [வயது 40- மட்டுவில்நாடு பூநகரி]

## காயமடைந்தோர்

## 60 படையினருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

சிறிலங்காவின் கடற்படையின் உதவி லெப்டினன்ட்களாகப் பதவிவகிக்கும் பதினைந்து பேர் லெப்டினன்ட்களாகவும், விமானப்படையில் விமானிகளாகப் பணியாற்றும் நாற்பத்தைந்து பேர் விமான அதிகாரிகளாகவும் பதவி உயர்த்தப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 'குமண' நாளை புறப்படும்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் உணவுப் பொருள்களை இறக்கும் 'குமண' கப்பல் நாளை கொழும்பு நோக்கிப் புறப்படும்.

4ஆம் பக்கம் பார்க்க]

## லலித்தின் கட்சி தனித்து போட்டியிடும்?

(கொழும்பு)

சிறிலங்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் டி.யு.என்.எப். எனப்படும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தனித்துப் போட்டியிட்டுக் கொள்ளலாம் எனவும் நம்பப்படுகிறது. இதேவேளை சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குழுவினரால் நிறுத்தப்படும் வேட்பாளருக்கு எதி

## புலிகளின் தளங்களை தாக்க படையினர் தயக்கம்

பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவிப்பு

(லண்டன்)

"யாழ். குடாநாட்டிலுள்ள புலிகளின் தளங்களை தாக்குவதற்கு சிறிலங்கா இராணுவத்தினர் தயங்குகின்றனர். அவ்வாறு தாக்குதல் நடத்துவதானால்பெரும்உயிரிழப்பை சந்திக்கவேண்டிவரும் என்பதே இத்தயக்கத்திற்கு காரணம்" இவ்வாறு பி. பி. ஸி. யின் கொழும்பு முகவர் தெரிவித்துள்ளார்.

இதனால் புலிகளின் முகாம்களை விமானம் மூலம் தாக்குவதே படையினரின் உத்தியாக காணப்படுகிறது என்றும் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்கள் பொதுமக்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

பி. பி. ஸியில் அவர் வழங்கிய செய்தியில் யாழ்ப்பாணத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட "பாதிச்செட்டை சுழன்றதில் பார்த்துப்பார்த்துப் போனார் பலாலிக்குப் போனார்" என ஏழு வயதுச் சிறுமிகள் பாடிய பாடலின் சிறுபகுதி ஒலிபரப்பப்பட்டது இச்சிறுமிகள் வண்ணத்துப் பூச்சிகளைப் பார்த்து இவ்வாறுபாடியதாக அவர் தெரிவித்தார்.

## கன்னியாகுமரிக்கருகே 4 இலங்கை மீனவர் கைது

(சென்னை)

கன்னியாகுமரிக்கருகே நடுக்கடலில் தத்தளித்த படகொன்றிலிருந்த நான்கு இலங்கை மீனவர்கள் கரைக்குக் கொண்டு வரப்பட்டு பதினைந்து நாட்கள் மறியலில் வைக்கப்பட்டனர்.

படகிலிருந்த டீசல் முழுவதும் முடிந்துவிட்டதாகவும் அதனால் இந்த மீனவர்கள் இலங்கைக்குத் திரும்ப முடியவில்லைஎன்றும்கூறப்படுகிறது.

பிரேமதாசாவிற்கு சவால்விட்ட

## சுதந்திரக்கட்சி எம். பி. வீடு திருடர்களால் உடைப்பு

ஆலங்கேணிக்குச் சென்று கொண்டிருந்த படகுகளே எமது நிருபருக்குத் தகவல் தருகையில், தமது படகை இதே போன்றே ஏனைய படகுகள் மீதும் துப்பாக்கிப்

# கடற்படை தாக்குதலுக்கு பலியான 9 பேர் விபரம்

(கிளிநொச்சி)

கிளாலி கடற்பரப்பில் வைத்து நேற்று முன் தினம் இரவு சிறிலங்கா கடற்படையினரால் கொடூரமான முறையில் வெட்டியும்சுட்டும் கொல்லப்பட்டவர்களில் ஒன்பது பேரின் பெயர் விபரங்கள் வருமாறு.

★ செல்லத்துரை சுப்பிரமணியம் [ஓய்வுபெற்ற பொலிஸ் சாரதி- கொடிகாமம்]

★ சதாசிவம் பாலசுப்பிரமணியம் [பேக்கரி உரிமையாளர் கொடிகாமம்]

★ அருணாசலம் பொன்னம்மா [வயது 35 கலட்டி பண்டத்தரிப்பு]

★ ஆறுமுகம் தர்மராசா வயது 51- நுணாவில் கிழக்கு சாவகச்சேரி] இவர் கிளிநொச்சி கல்வி அதிகாரி ஆவார்.

★ விஸ்வலிங்கம் செல்லத்துரை [வயது 38- நாவற்காடு வறணி] இவர் மன்னார் நீதிமன்ற ஊழியராவார்.

★ கோபாலபிள்ளை [வயது 40- மட்டுவில்நாடு பூநகரி]

★ செல்லத்துரை பரமேஸ்வரி [வயது 42- சேச்சேலன் கொக்குவில் மேற்கு]

★ பாபு கோபால் [ஜெயபுரம் பல்லவராயன்கட்டு]

★ மகேஸ்வரி தில்லையம்பலநாதன் [வயது 48 அச்சகலேன் கொக்குவில்]

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட ஏனையோரின் பெயர் விபரங்களை உடன் அறிய முடியவில்லை. (16)

## காயமடைந்தோர்

(கிளிநொச்சி)

கிளாலி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்காவின் கடற்படையினர் பயணிகள் படகுகள்மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆறுபேர் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் கிளிநொச்சி அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் மேற்படி சம்பவத்தில் காயமடைந்தோர் பற்றிய பெயர் விபரங்கள் பின்வருமாறு:

★ கோ. அழகன் [வயது 25] முள்ளிலேன் அரியாலை.

★ செ. ஐங்கரன் (வயது 27) கொககுவில்.

★ கந்தையா செல்லத்துரை (வயது 68) குளப்பிட்டி.

★ செல்லையா கனகசபாபதி (கலட்டி பண்டத்தரிப்பு)

★ நடராசா றோகினி (வயது 26 — பனிப்புலம் பண்டத்தரிப்பு)

★ செல்வரட்ணம் (வயது 41) யாழ்ப்பாணம். [16]

# வவுனியாவில் புலிகள் தாக்கு; இரு படை பலி; ஆயுதம் மீட்பு

(வவுனியா)

வவுனியா நாவற்குளம் பகுதியில் நேற்றுக் காலை 7.50 மணியளவில் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகினர் இருவர் காயமடைந்தனர்,

இப்பகுதியில் அமைந்துள்ள ராணுவ காவலரணில்இருந்து 75 யார் தூரத்தில் தடைகளை அகற்றிக் கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தின் மீதே விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடாத்தினர்.

இத்தாக்குதலினால் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இத்தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

★ ரி 81 - 1 ரகதுப்பாக்கி — 01

★ ரி 81 மகசின் — 05

★ ரவைகள் — 160

★ ஜே.ஆர் கைக்குண்டு— 02

★ ஏ.கே. கோல்சர் — 01

★ இராணுவப்பட்டி — 01

# சிங்களபொலிஸ்-முஸ்லிம்கள் ஏறாவூரில் மோதல்

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொலிசார் முஸ்லிம் பெண்களை கேலி செய்ததை அடுத்து அப்பகுதி முஸ்லிம் மக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பலர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது; ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் முஸ்லிம் பெண்களை கேலி செய்ததாகவும் இதுகுறித்து விசாரிக்கச் சென்ற இரு ஊர்காவற்படையினரை பொலிசார் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அப்பகுதியைச்சேர்ந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டதாகவும் இவர்களைக் கலைக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகமும் தாக்குதலும் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கரையை அடையமுடிந்தது எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை. இத்தாக்குதலுக்கு உள்ளான படகில் பயணம் செய்த கொக்குவிலைச் சேர்ந்த ஒருவர் கடற்படையினர் தாக்கிய போது கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்த

[4ஆம் பக்கம் பார்க்க]

## நாளை புறப்படும்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்கு துறையில் உணவுப் பொருள்களை இறக்கும் 'குமண' கப்பல் நாளை கொழும்பு நோக்கிப் புறப்படும்.

[4ஆம் பக்கம் பார்க்க]

# லலித்தின் கட்சி தனித்து போட்டியிடும்?

(கொழும்பு)

சிறிலங்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் டி.யு.என்.எப். எனப்படும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தனித்துப் போட்டியிடலாம் எனத் தெரியவருகிறது. இதற்காக சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடனான கூட்டணி உறவை அக் கட்சி துண்டித்துக் கொள்ளலாம் எனவும் நம்பப்படுகிறது. இதேவேளை சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குழுவினரால் நிறுத்தப்படும் வேட்பாளருக்கு எதிராக ஒரு வேட்பாளரை நிறுத்துவதற்கு அநுரா குழுவினர் முயற்சித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

# தாண்டிக்குளம் ஊடாக நகை அணிந்துவர அனுமதி

(கொழும்பு)

தாண்டிக்குளம் ஊடாக வடபகுதி நோக்கி வரும் பயணிகள் சாதாரண முறையிலான தங்க நகைகளை அணிந்துவரலாம் எனவும், எனினும் தங்கக் கட்டிகளை எடுத்துவர எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் வவுனியா பிரதேச இராணுவ இணைப்பதிகாரி கூறியுள்ளார்.

வவுனியா தாண்டிக்குளம் ஊடாக தங்கநகை எடுத்துச் செல்வதில் பயணிகள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பற்றி சுட்டிக்காட்டியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் பொதுமக்கள் முறைப்பாடுகள் எதுவுமிருப்பின் வவுனியா கண்டிவீதியில் 'ரம்ய ஹவுஸ்' இல்லத்திலிருக்கும் இராணுவ பொலிசாரிடம் முறையிடலாம் எனவும் குறிப்பிட்டார்.

கனை விமானம் மூலம் தாக்குவதே படையினரின் உத்தியாக காணப்படுகிறது என்றும் அண்மைக் காலத்தில் மேற் வண்ணத்துப் பூச்சிகளைப் பார்த்து இவ்வாறுபாடியதாக அவர் தெரிவித்தார்.

# கன்னியாகுமரிக்கருகே 4 இலங்கை மீனவர் கைது

(சென்னை)

கன்னியாகுமரிக்கருகே நடுக்கடலில் தத்தளித்த படகொன்றிலிருந்த நான்கு இலங்கை மீனவர்கள் கரைக்குக் கொண்டு வரப்பட்டு பதினைந்து நாட்கள் மறியலில் வைக்கப்பட்டனர்.

படகிலிருந்த டீசல் முழுவதும் முடிந்துவிட்டதாகவும் அதனால் இந்த மீனவர்கள் இலங்கைக்குத் திரும்ப முடியவில்லைஎன்றும்கூறப்படுகிறது.

பிரேமதாசாவிற்கு சவால்விட்ட

# சுதந்திரக்கட்சி எம்.பி. வீடு திருடர்களால் உடைப்பு

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி பா.உ. பந்துலகுணவர்த்தனவின் கொவுவல எனும் இடத்தில் அமைந்துள்ள வீடு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு கதவுகள் உடைக்கப்பட்டு சில பொருள்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இவரது வீட்டில் பெறுமதி வாய்ந்த பல பொருள்கள் காணப்பட்டபோதிலும் இத்திருடர்கள் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகள் தொடர்பாக பந்துல குணவர்த்தன சேகரித்து வைத்திருந்த சில ஆவணங்களையே திருடிச் சென்றுள்ளனர்.

1992 இறுதிக்குள் 200 ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகளை பிரேமதாசா நிறுவினால் தாம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்க தயார் என பந்துலகுணவர்த்தன தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

எனினும் கடந்த ஆண்டு பிரேமதாசாவினால் 62 ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகளை மட்டுமே திறக்க முடிந்தது அவற்றிலும் இரண்டு தொழிலாளர்வேலைநிறுத்தம் காரணமாக மூடப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் மிரட்டல் நடவடிக்கையாகவே இத்திருட்டு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

# குடாநாட்டில் உணவு நெருக்கடி பஞ்சம் உருவாகும் அபாயம்

## ஜனாதிபதிக்கு அரச அதிபர் மகஜர்

(யாழ்ப்பாணம்)

மிக ஆபத்தான சூழ்நிலை இப்போது மாவட்ட நிர்வாகத்தை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலை சிறிது காலம் தொடருமாயின் பஞ்சம் ஏற்படும். ஆகவே, உணவுக் கப்பல்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்து, உணவு எடுத்துவரும் கப்பல்களை மாதத்துக்கு மூன்றாக உடனடியாக அதிகரிக்கும்படி மாண்புமிகு ஜனாதிபதியாகிய உங்களைக் கேட்கும் நிர்ப்பந்தத்துக்கு நான் உள்ளாகியுள்ளேன் - இவ்வாறு யாழ். அரச அதிபர் கே மாணிக்கவாசகர் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளார்.

அம் மகஜரில்; யாழ். மாவட்டத்துக்கான உணவு விநியோகம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. உணவு விநியோகத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ளாவிட்டால், உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க வேண்டி ஏற்படும். இதற்குக் காரணம்-

யாழ். குடாநாட்டிற்கான வழிகள் எல்லாம் அடைக்கப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசிய உணவுப்பொருள்களான அரிசி, மா, சீனி, தேங்காய் எண்ணெய் மற்றும் பண்டங்களையும் வழி வியாபாரிகள் எடுத்துவரமுடியாதுள்ளது.

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு உணவுப் பண்டங்களை ஏற்றி இறக்க அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களின் சேவையும் குறைக்கப்படவுள்ளது

இப்போது கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் நோயாளிகளை ஏற்றிச் செல்வதிலும், ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான மருந்து வகைகளையும் முக்கிய பண்டங்களையும் அரச திணைக்களங்களுக்கும். மனித நேய ஸ்தாபனங்களுக்கும் கொண்டு வரும் குமண என்ற கப்பல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழீழபொதுக்கல்விதேர்வு முடிவுகள் வெளியாகும்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் கடந்த நவம்பரில் நடைபெற்ற தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு முன்னோடிப் பரீட்சை வெளி மாவட்டப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

யாழ்.பிரதேசப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் ஓரிரு தினங்களில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சைவசித்தாந்த கற்பித்தலுக்கு போதனாசிரியர்கள் இல்லை

## துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்துக்கு ஒரு பீடம் அமைக்க அறக்கொடையை ஒருவர் அளித்துள்ளார். சைவசித்தாந்தம் கற்கைநெறிக்கு ஒரு பேராசிரியரை நியமிக்கத் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி கடந்த மூன்று வருடங்களாக விளம்பரப்படுத்தியபோதிலும் ஒருவர் தானும் முன்வரவில்லை என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அ. துரைராசா தெரிவித்தார்

கைலாசபதிஅரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புறநிலைப் படிப்புகள் சைவசித்தாந்த கற்கைநெறி ஆரம்ப நிகழ்வில் தலைமையுரைநிகழ்த்திய பேராசிரியர் அ. துரைராசா இதனைத்தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், பல்கலைக்கழகம் ஒரு தந்தக் கோபுரம் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது இன்று பல்கலைக்கழகங்கள் சமூகத்துடன் இணைந்து சமூகங்களை மேம்படுத்தும் வகையில் பங்காற்றிவருகின்றன. யாழ். பல்கலைக்கழகம் அதனைச் சார்ந்த சமூகத்துடன் இணைந்து பல்துறை வளர்ச்சிக்குப் பயன்பொருத்தமான கற்கை நெறிகளை ஆரம்பித்துள்ளது.

இந்த நோக்கத்துடனேயே புறநிலைப்படிப்புகள் அலகு சைவசித்தாந்த தொடர் விரிவுரைகள் இன்று ஆரம்பித்துள்ளது. ஏனைய புறநிலைப் படிப்புக் கற்கைநெறிகளும் ஆரம்பிக்கப்படும் என்றார்.

புறநிலைப் படிப்புகள் அலகு இணைப்பாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய இரா. சிவச்சந்திரன் உரையாற்றுகையில், புறநிலைப் படிப்பு அலகு என்பதன் கருத்து பல்கலைக்கழகச் சுவருக்கு வெளியே அறிவைக் கொண்டுசெல்லுதல் சமூக அறிவை உள்வாங்குதல் என்பதாக அமைகிறது. உண்மையில் இத்துறைசார் படிப்புகள் பல்கலைக்கழகத்தின் பொதுவான கலைத்திட்டத்திற்கு உட்படாத, புறநிலையில் உள்ள படிப்புகளையும், மேலதிக படிப்புகளையும் பெறுவதாக அமைகின்றது என்றார்.

# நேர்முகப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் எதிர்வரும் 1993-ம் ஆண்டு பயிற்சி நெறிகளுக்கு அனுமதிகோரி விண்ணப்பித்த மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றுவருகின்றது கடந்த ஆண்டுகளிலும் பார்க்க இம்முறை பெருந்தொகையானவர்கள் இப் பயிற்சி நெறிகளுக்கு அனுமதி கோரி விண்ணப்பங்களை அனுப்பிவைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# 'சித்த மருத்துவ' வெளியீடு

[யாழ்ப்பாணம்]

யாழ்பல்கலைக்கழக1990-91 ஆம் கல்வியாண்டின் சித்த மருத்துவ மாணவர் மன்றத்தின் "சித்த மருத்துவ" ஐந்தாவது மலர் வெளியீடு நாளை மறுதினம் புதன் கிழமையன்று [6-1-93] கைதடி சித்தமருத்துவ அரங்கில் பிற்பகல் 1 30 மணியளவில் நடைபெறவுள்ளது. [05]

கூட்டுறவு ஊழியர்களின்

# மேலதிக கொடுப்பனவு வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற 314 ரூபாய் மேலதிக கொடுப்பனவு 1-1-88 இற்கு பின் நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இக்கொடுப்பனவை சகல ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று வட-கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரை கேட்டுக் கொண்டுள்ளது.

அண்மையில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ப. நோ. கூ. சங்க தலைவர்கள் வட-கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க பிரதிநிதிகளிற்கும் இடையில் கூ. அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றகலந்துரையாடலிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (88)

# கண்டல் மரநடுகை பரீட்சார்த்த முயற்சி

[யாழ்ப்பாணம்]

கண்டல் காடுகளை விருத்தி செய்யக்கூடிய பொருத்தமான இடங்களை அடையாளம் காண்பதிலும் அப்பகுதிகளில் இவற்றினைப் பெருக்கவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

இதன் ஒரு பரீட்சார்த்த முயற்சியாக வல்லை வெளியில் சிறிய சில கண்டல் மரக்கன்றுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடுகை செய்யப்பட்டுள்ளது.

கண்டல் காடுகள் அவற்றின் பட்ட மரங்கள் இன்றைய விறகுத் தேவையில் கணிசமான பங்கை கொண்டிருப்பதும் வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் இவை பெருமளவில் காணப்படுவதும் தெரிந்ததே.

## வரி விளம்பரம்

### அராலியூரரின் நாடகங்கள்

அராலியூரரின் வானொலி நாடகங்களை பலரும் மேடையில் நடித்துவிட்டனர். மாணவர்களும் நடிப்பதற்கேற்றவை. நடிக்கலாம் சிரித்து மகிழலாம். 1. கெட்டிக்காரர்கள், 2. முதலாம்பிள்ளை 30/-. இலக்கியப் பரிசு பெற்ற 19 நாடகங்கள். (3243)

### வெளிவந்துவிட்டது

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு உதவும் தமிழ் ஆண்டு 5 செயல் நூல் வெளிவந்து விட்டது. விரிவான விளக்கங்கள், பயிற்சிகள் கொண்டது ஆக்கம் த. துரைசிங்கம், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3917)

### சித்திரம் வினா-விடை

ஆண்டு 10, 11இல் சித்திரம் கற்போருக்கும், வட-இலங்கை நுண்கலை மன்றப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் உதவும் சித்திரம் வினா—விடை விற்பனையாகிறது. ஆக்கம்: த. சிவயோகலிங்கம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3918)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி (வ-ர679)

### புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சாட்டி செட்டிபுலம் சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் பண்டிதர் குடியிருப்புகெற்பலியில் நடைபெற்றது. இதன் போது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர் இதில் தலைவராக க. மார்க்கண்டு தாசனும் உபதலைவராக க. சண்முகராசாவும் செயலாளராக வே. நகுலேந்

# இரண்டு வருடமாக சம்பளம் வழங்கவில்லை

(மாங்குளம்)

ஒட்டிசுட்டான் செங்கல் ஓட்டு தொழிற்சாலையில் இதுவரைகாலமும் பணி புரிந்துவரும் நிரந்தர ஊழியர்களுக்கு இரண்டு வருடங்களுக்கும் மேலாக அவர்களுக்குரிய சம்பளம் வழங்கப்படவில்லையென தெரியவருகின்றது.

ஊழியர்களின் சம்பளத்தைப் பெறும் நோக்கத்துடன் முகாமையாளர் கொழும்பு சென்றார். ஆனால் மட்பாண்டக்கூட்டுத்தாபனம் அவ்வூழியர்களுக்கான சம்பளத்தை வழங்க மறுத்துவிடவே அவர் வெறுங்கையோடு திரும்பியுள்ளார்.

இங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக கடமை புரியும் ஊழியர்கள் கூட கொடுப்பனவு இல்லாமல் கடமை புரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

விசேஷ வைத்திய பரிசோதனைக் குறிப்புக் கொப்பிகள் 500ஐ மருந்து வர்த்தகர் சிவஞானம் சிறிகணேசன் யாழ். அரசினர் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந்தப் பரிசோதனைக் குறிப்புக் கொப்பிகளுக்கு போதனா வைத்தியசாலையில் தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளர் குறிப்புக் கொப்பிகளை மருந்துக் கடைகளில் விலை கொடுத்துப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# வேலைப்பரிசோதகர் காரியாலயம் மூடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலக வேலைப் பரிசோதகர் காரியாலயம் மூடப்பட்டுள்ளது. இவ் அலுவலகத்தில் கடமையாற்றிய வேலைப்பரிசோதகர்கள் குடாநாட்டின் பல்வேறு பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றப்பட்டிருக்கின்றனர். இந்த வகையில் வேலைப்பரிசோதகர் திரு. தங்கராசா கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு கடந்த முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

### கொடுப்பனவு இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

ப நோ. கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 314/- கொடுப்பனவு 1-1-88 இற்குப் பின்பு சேவை

### நியமனத்தில் பாரபட்சம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்பும் போது சேவையிலிருந்து கொண்டே பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால் இது பின்பற்றப்படாதமை கவலைக்குரியதே என இ. த. ஆ சங்கத்தின் பொதுச் செயலாளர் தி மா சிவம் தெரிவித்துள்ளார்.

ஜன - பிடிக்கும் உயர் கல்வி

தென்னிலங்கை

# பல்கலை. பீடாதிபதிகள் கடமைகளைத் துறந்தனர்

## அலுவலக திறப்புகள் ஒப்படைப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர்களுடன் இணைந்து சம்பள உயர்வு கோரிப் போராடும் பல்கலைக்கழகப் பீடாதிபதிகள், கடந்த வெள்ளிக்கிழமை தமது அலுவலகத் திறப்புகளைத் தத்தமது துணைவேந்தர்களிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் நீங்கலாக அனைத்துப் பல்கலைக் கழகப் பீடாதிபதிகளும் தமது அலுவலகத் திறப்புகளைக் கையளித்து தமது பீடாதிபதிப் பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசர காலச் சட்டத்தைப் பாவித்து அரசு எம்மை மிரட்ட முடியாது. என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் கருத்துத் தெரிவித்துள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வை வழங்க மானியக்குழு விடம் பணம் இல்லாவிட்டால் மானியக்குழு கலைக்கப்பட வேண்டியது என்றும் சம்மேளனத்தின் தரப்பில் கூறப்பட்டது

# ஆலங்கேணியில் நூற்றுக்கணக்கான லொறிகள் பொருள்களுடன் தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்கென எடுத்து வரப்பட்ட உணவு. மண்ணெண்ணெய், மற்றும் தேங்காயெண்ணை ஆகிய பொருள்களுடன் வந்த சுமார் நூற்றிற்கும் மேற்பட்ட லொறிகள் பூநகரி ஆலங்கேணியில் இருந்து கிளிநொச்சி வரை வந்து தரித்து நிற்கின்றன என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளாலிப் பாதையூடான போக்குவரத்தில் சிரமமையால் இவை கிழமைக் கணக்கில் பொருள்களை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கென காத்து நிற்கின்றன என தெரியவருகின்றது.

இதுஇவ்வாறுஇருக்க ஆனையிறவு பூநகரிப் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் படையினர் அடிக்கடி கிளாலிக் கடற்பரப்பில் பொருள்களை ஏற்றி வருகின்ற படகுகள் மீது தாக்குதல்களை நிகழ்த்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது (யா)

ஊர்காவற்படையின்சம்பளம்

# கையாடிய பொலிஸார் விளக்கமறியலில்

(கொழும்பு)

ஊர்காவல் படையினரின் சம்பள பணத்தை கையாடிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது ஊர்காவல் படையினருக்கு வழங்குவதற்கென வைக்கப்பட்டிருந்த 4

இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# வெடிவிபத்தில் 100 பேர் காயம்

(கொழும்பு)

# நினைவு கூருகின்றோம்...
## 1993-01-04

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ சோமேஷ் (சோமேஸ்வரன் திருநெல்வேலி- யாழ்ப்பாணம்)

1986ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

★ கதிர்காமன் நவரத்தினம் (முறக்கொட்டாஞ்சேனை - மட்டக்களப்பு)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட

284, ஸ்ரான்லி வீதி, (வாண வில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி (கி-5679)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சாட்டி செட்டிபுலம் சன சமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் பண்டிதர் குடியிருப்பு கெற்பலியில் நடைபெற்றது. இதன் போது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் தலைவராக க. மார்க்கண்டு தாசனும் உபதலைவராக க. சண்முகராசாவும் செயலாளராக வே. நகுலேந்திரனும் உப செயலாளராக த. தேவகுமாரும் பொருளாளராக சத்தியேந்திரனும் மேலும் 6 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (88)

## உலர் உணவு அட்டை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

சரவணைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்களது உலர் உணவு அட்டைகளை யாழ் செயலகத்தில் இயங்கும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது.

## நேர்முகப் பரீட்சை முடிவுற்றது

(கிளிநொச்சி)

கிராம சேவகர் போட்டிப் பரீட்சையில் தெரிவானோருக்கான நேர்முகப் பரீட்சை கடந்த வாரம் கிளிநொச்சியில் நடை பெற்றது.

கிராம சேவை அலுவலர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்திற்குத் தெரிவான 74 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்ற போதிலும் 24 பேர் மட்டுமே தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் பணிமனையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக் குழுவில் மாகாணசபை உறுப்பினர் ஒருவரும் காணப்பட்டார்.

இதில் கிராம சேவகர்களாக தெரிவானோருக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு கிழக்கு மாகாணசபை ஊடாக விரைவில் அனுப்பி வைக்கப்படும் என அங்கு உறுதியளிக்கப்பட்டது. (16)

## காரியாலயம் மூடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலக வேலைப் பரிசோதகர் காரியாலயம் மூடப்பட்டுள்ளது. இவ் அலுவலகத்தில் கடமையாற்றிய வேலைப்பரிசோதகர்கள் குடா நாட்டின் பல்வேறு பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றப்பட்டிருக்கின்றனர். இந்த வகையில் வேலைப்பரிசோதகர் திரு. தங்கராசா கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு கடந்த முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

## கொடுப்பனவு இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

ப நோ. கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 314/- கொடுப்பனவு 1-1-88இற்குப் பின்பு சேவையில் இணைந்த ஊழியர்களுக்கு வழங்கப்படுவதில்லை எனத் தெரியவருகிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள சில ப நோ. கூட்டுறவுச் சங்கங்கள் சகல ஊழியர்களுக்கும் இக் கொடுப்பனவை வழங்கி வருகிறன. புங்குடுதீவு ப. நோ கூட்டுறவுச் சங்கமும் சகலருக்கும் வழங்கி வந்தது. ஆயினும் மார்கழி மாதத்தில இருநது 1-1-88ற்கு பிற்பட்ட ஊழியர்களுக்கு வழங்குவதை நிறுத்தியுள்ளது. இதனால் இவ் ஊழியர்கள் பெரும் பொருளாதரக் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். (88)

## புத்தாடைகள் அன்பளிப்பு

மானிப்பாய் நவாலி ஆகிய பகுதிகளில் தென்னிந்தியத் திருச்சபையினால் அமைக்கப்பட்ட குடிசைகளில் வாழும் 200 இடம் பெயர்ந்த குடும்பங்கட்கு பேராயர் D. J. அம்பலவாணர் அவர்களினால் புத்தாண்டு தினத்தன்று புத்தாடைகள் வழங்கப்பட்டன. சாரம், சேலை, படுக்கை விரிப்பு, சட்டைத்துணி அடங்கிய 200 பொதிகளை விநியோகிக்கும்போது பேராயர், "புத்தாண்டில் தமிழரின் துன்பங்கள் தீரவேண்டும். மக்கள் பழைய வாழ்க்கை நிலைக்குத் திரும்ப வேண்டும் என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாகத் தெரிவித்தார்.

## அலவன்ஸ் வழங்கப்படும்

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன அலுவலக ஊழியர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் வழங்கப்படவுள்ளது.

யாழ். நகரப்பகுதியில் இயங்கி வரும் இந்த அலுவலக ஊழியர்களுக்கு தலா மூவாயிரம் ரூபா சைக்கிள் அலவன்ஸ் வழங்கப்படவுள்ளது. (42)

## நியமனத்தில் பாரபட்சம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்பும் போது சேவையிலிருந்து கொண்டே பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால் இது பின்பற்றப்படாதமை கவலைக்குரியதே என இ. த. ஆ சங்கத்தின் பொதுச் செயலாளர் திமாசிலம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் தலைவருக்கும் பொதுச் செயலாளரினால் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (42)

## லண்டன் பயணமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் க. ஜெயரத்தினம் லண்டனிலுள்ள காட்டார்பீல்ட் பல்கலைக்கழகத்தின் புலமைப்பரிசில் பெற்று அங்கு பயணமானார்.

இவர் மேற்படிப்பை ஆறு மாதகாலமாக பெறுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது

## ஆய்வு நடத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களுக்குச் சென்று சுகாதாரம் போஷாக்கு பற்றி ஆய்வு நடத்தியுள்ளனர்.

மறுமலர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த 24 மாணவ மாணவிகள் இந்த ஆய்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (42)

## கடத்தல் பிடிபட்டது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இரண்டு வள்ளங்களில் ஏற்றி வரப்பட்டதாகக் கூறப்படும் மூன்று லட்சத்து அறுபதினாயிரம் ரூபா பெறுமதியான புடைவைகளை கல்கிசைப் பகுதியில்வைத்து சுங்கத்துறையினர் கைப்பற்றியுள்ளனர். ஒன்பதாயிரம் புடைவைகள் கைப்பற்றப்பட்ட இச்சம்பவம் தொடர்பாக பத்தொன்பது பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களும் தமது அலுவலகத் திறப்புகளைக் கையளித்து தமது பீடாதிபதிப் பதவிகளை ராஜி

யக் குழு கலைக்கப்பட வேண்டியது என்றும் சம்மேளனத்தின் தரப்பில் கூறப்பட்டது

ஊர்காவற்படையின்சம்பளம்

## கையாடிய பொலிஸார் விளக்கமறியலில்

(கொழும்பு)

ஊர்காவல் படையினரின் சம்பள பணத்தை கையாடிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது ஊர்காவல் படையினருக்கு வழங்குவதற்கென வைக்கப்பட்டிருந்த 4 இலட்சத்து 86 ஆயிரத்து 409 ரூபாவை தவறான முறையில் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரிலேயே சம்பந்தப்பட்ட பொலிஸார் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஹொறப்பொதிதானைப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று காவல்துறையினரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## வெடிவிபத்தில் 100 பேர் காயம்

(கொழும்பு)

நத்தார், மற்றும் புதுவருடப்பிறப்பன்று கொழும்பில் பட்டாசுகள் கொளுத்தியவர்களில் நூற்றுக்கும் அதிகமானோர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகர் பதினைந்து வயதுக்கு உட்பட்டோராவர். மேலும் பதினாறு பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப். சக்தி**

(கனகசிங்கம் சிறிகந்தராஜா)

(சேனையூர், மூதூர் - திருமலை)

| வீரப்பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 02-02-1974 | 04-01-1992 |

சிறிலந்த சிங்கள இராணுவத்தை
சிதறி ஓட வைத்திடவே
சினங்கொண்ட வேங்கையாக
களத்திடை புகுந்தவனே — நீ
சிந்திய குருதியால் இம்மண் சிவக்கும்
இங்கொரு காலை விடியும்.

[3920] - நண்பர்கள்

செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளாலிப் பாதையூடான போக்கு வரத்தில் சிரமமை

ஏற்றி வருகின்ற படகுகள் மீது தாக்குதல்களை நிகழ்த்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (யா;

## நினைவு கூருகின்றோம்... 1993-01-04

1985ஆம் ஆண்டு இதே திகதியில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ சோமேஷ் (சோமேஸ்வரன் திருநெல்வேலி- யாழ்ப்பாணம்)

1986ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

★ கதிர்காமன் நவரத்தினம் (முறக்கொட்டாஞ்சேனை - மட்டக்களப்பு)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தரை, வான் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 6- தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - நீர்வேலி, அச்செழுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் அருள்மாஸ்ரர் (மாணிக்கம் ரவீந்திர ராஜா - 268/21 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்)

சுரேஷ்மாஸ்ரர் (பத்மநாதன் சுரேஷ்குமார் - நீர்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்)

மணலாறு - புதுக்குடியிருப்புப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட 8-தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு - நாவற்குடாப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

கவாஸ்கர் - கிருஷ்ணா (சி. தர்மகிருஷ்ணன்-நாவற்குடா மட்டக்களப்பு)

1991ஆம் ஆண்டு கிளிநொச்சி - ஆனையிறவு முகாம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் அமலன் (தம்பித்துரைச்சாமி விஜயசிங்கம்- வீரமாணிக்க தேவன்துறை மயிலிட்டி - யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட - இளைஞன் உட்பட - செங்கலடி 02ஐச் சேர்ந்த 3 தமிழர்கள்.

1992 ஆம்ஆண்டு திருக்கோணமலையில் எதிர்பாராத விதமாக மிதிவெடி வெடித்ததில் எமைப் பிரிந்த

லெப். சக்தி (கனகலிங்கம் சிறிஸ்கந்தராசா - சேனையூர், மூதூர் - திருக்கோணமலை)

முல்லைத்தீவு - முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த இளம்பெண்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[கி-5702]

## சிந்தனைக்கு

ஒரு செயல் மனதில் பதிவதைப் போல, ஆயிரம் சொற்கள் கூடப் பதிய மாட்டாது.

- ஹென்றிக் இப்சென் -


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 04-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05


## பேச்சொன்று செயலொன்று

ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் தர்ம போதனைகள் பிரசித்தமானவை. அவர் அடிக்கடி தன்னை ஒரு தீர்க்கதரிசியாகவும், அவதார புருசராகவும் பாவித்து 'ஞான போதனை'களில் ஈடுபடுவதுண்டு. இப்போதனைகள் சில வேளை அரசியல் சார்ந்ததாகவும், சில வேளைகளில் சமயம் சார்ந்தவைகளாகவும் இருப்பதுண்டு.

இந்த வகையில், நேற்று முன்தினம் தனது நான்காவது ஆண்டு ஆட்சியைக் குறிக்கும் முகமாக கண்டி தலதா மாளிகை எண்கோண மண்டபத்தில் நின்று சில அரசியல் போதனைகளை அவர் செய்துள்ளார். இதில், 'இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்பட்டால், அது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகவே அமையும், இன்று நாட்டிற்குத் தேவையானது வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குச் சமாதான தீர்வு ஒன்றே. இதனைச் செய்வதன் மூலமே நாடு துண்டாடப் படுவதைத் தடுக்க முடியும்' என்பதும், ஆயுதங்கள் மூலம் சமாதானம் நிலை நாட்டப்பட்டதாக வரலாறு இல்லை என்பதும் முக்கியமானவையாகும்.

ஆனால், திரு. பிரேமதாசாவின் போதனைக்கும், அவரது நடவடிக்கைகளுக்கும் இடையில் எப்பொழுதுமே பாரிய வேறுபாடுகள் காணப்படுவதுண்டு. நாளாந்தம் ஏதோ ஒரு விகாரைக்குச் செல்வதும், அங்கு நடக்கும் சமய வைபவங்களில் கலந்து கொள்வதும், அங்கு கூடியுள்ளவர்களுக்கு புத்தரின் போதனையுடன் இணைந்து அரசியல் போதனை செய்வதும் திரு. பிரேமதாசாவின் நாளாந்த வேலைகளில் ஒன்றாக மாறி விட்டது.

ஆனால், திரு. பிரேமதாசாவின் ஆட்சி நில

# செக்கோஸ்லாவாக்கியா பிரிவினை; இரு நாடுகளின் சுகப் பிரசவம்

எழுபத்து நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக செக்கோஸ்லாவாக்கியா என அழைக்கப்பட்ட முன்னாள் கம்யூனிஸ நாடு ஒன்று அண்மையில் பிரிந்து போய்விட்டது. மேற்கில் வாழும் செக் இன மக்களும், கிழக்கில் வாழும் ஸ்லோவாக்கிய இன மக்களும் தத்தம் எல்லைகளைவரைந்து கொள்ளத் தீர்மானித்ததன் மூலம் இரண்டு புதிய தேசங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஐரோப்பாக்கண்டத்தில் ஜேர்மனி, ஆஸ்திரியா, கங்கேரி, யூகோஸ்லவாக்கியா, ஆகிய நாடுகளின் நடுவே இருந்த நாடுதான் செக்கோஸ்லாவியா ஜேர்மனியர்கள், உக்ரேனியர்கள், போலந்துக்காரர்கள், மற்றும் ஹங்கேரியர்கள், எனச் சிறுபான்மை இன மக்களுடன் செக் இன மக்கள் நாட்டின் மேற்குப் பகுதியில் பெரும்பான்மையினராகவும், ஸ்லோவாக்கிய மக்கள் கிழக்குப் பகுதியில் பெரும்பான்மையினராகவும் வாழ்ந்தனர். ஆனால், கடந்த யூன் மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் பிரிந்து போய் வாழ ஸ்லோவாக்கிய மக்கள் தீர்மானித்ததைத் தொடர்ந்து 1992இன் இறுதியில் செக் என்றும் ஸ்லோவாக்கியா என்றும் இரண்டு புதிய தேசங்கள் உருவாக்கப்பட்டன.

இது பொதுவான தற்போதைய ஐரோப்பாவின் போக்கிற்கு ஒரு வகையில் முரணானதாகக்கூட இருக்கின்றது. கூட்டுப்பொருளாதார நலன்கள், திறந்த சந்தைப் பொருளாதாரம், என்பனவற்றின் அடிப்படையில் தேசிய எல்லைகளைக் கடந்து பரந்த ஐரோப்பிய சமூகம் ஒன்றை கட்டியெழுப்பும் முயற்சியிலேயே பெரும்பாலான மேற்கு ஐரோப்பியநாடுகள் முனைந்து நிற்கின்றன. ஒன்றிணைந்த ஐரோப்பாவை உதயமாக்குவதற்கான பரவலான முயற்சிகள் முன்னேற்றகரமாக நகர்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்படும் இவ்வேளையில்- இருபதாம் நூற்றாண்டுஇறுதியில் ஒன்றிணைந்த ஐரோப்பா குதூகலமானதாக விளங்கும் என்று ஆருடம் கூறப்படும் அத்தருணத்தில்- பிரிட்டன், ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி எனப்பலநாடுகள் பொதுவான ஐரோப்பிய நாணயம் ஒன்றை உருவாக்குவது பற்றிச் சிந்திக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில்- செக்கோஸ்லாவாக்கியாவில் இவற்றிற்கு முற்றிலும் முரணான நேரெதிர்த் திசையில் இருப்பதைக் காட்டுகிறது.

இந்த நிலைமையானது 'இன்றையஉலகில்மனிதனுக்கு தேவையாக இருப்பது தேசிய அரசுதான்" என்று முன்னாள் யூகோஸ்லாவியாவில் இருந்து உருவான ஸலவேனியா குடியரசின் ஜனாதிபதியான மிலான் இச்சன் கூறியதற்கு வலுச்சேர்ப்பதாகவே அமைந்ததைக் காணலாம். செக்கோஸ்லாவாக்கியா என்னும் ஒரு தேசமாகவே கட்டுப்பட்டுக் கிடந்த செக் இன மக்களும், ஸ்லோவாக்கிய இன மக்களும் தத்தம் தலைவிதியை தாமே தீர்மானிக்கவும் நிர்ணயிக்கவும் முனைந்தமையின் காரணத்தால் புதியநாடு உருவாகியது ஜேர்மனிய சர்வாதிகாரியான ஹிட்லரின் ஆக்கிரமிப்புக்கும் பின்னர் சோவியத் செம்படைகளின் 'விடுவிப்புக்கும்' இலக்காகிய செக்கோஸ்லாவாக்கியா சோவியத் சீர்குலைவிற்குப் பின்னர் ஜனநாயக மறுமலர்ச்சிக்கும் பொருளாதார சீர்திருத்தத்துக்கும் உட்பட்டுள்ளது

செக்கோஸ்லாவாக்கியாவில் கடந்த ஜூன் மாதத்தில் நடந்த தேர்தலின் போது மேற்கில் பெரும்பான்மையாக வாழும் செக் இன மக்கள் பொருளாதார சீர்திருத்தத்திற்கும், சந்தைப் பொருளாதார அமைப்பிற்கும் ஆதரவாகப் பெருமளவில் வாக்களித்தனர். இதனால் சிவிக் ஜனநாயகக் கட்சி அப்பகுதிகளில் அமோக வெற்றியை ஈட்டியது எனினும் கிழக்குப் பகுதியில் வாழும் சிறுபான்மையினராகிய ஸ்லோவாக்கிய இனமக்கள் தேசிய தனித்தன்மையைப் பேணுவதில் ஆர்வம் காட்டிய ஸ்லோவாக்கிய ஜனநாயகக் கட்சியையே பெருமளவில் ஆதரித்தனர்.

இந்தத் தேர்தல் முடிவுகளின் மூலம் செக்கோஸ்லாவியா பாராளுமன்றத்தில் ஒரு முட்டுக்கட்டை நிலை தோன்றியது. செக்கோஸ்லாவியாவின் சமஷ்டிப் பாராளுமன்றத்தில் கிளாஸ் தலைமையிலான சிவிக் ஜனநாயகக் கட்சி எண்பது ஆசனங்களையும், விளாடிமீர் மெசியரின் தலைமையிலான ஜனநாயக ஸ்லோவாக்கிய இயக்கம் ஐம்பத்து நான்கு ஆசனங்களையும், இடதுசாரிகள் மற்றும் உதிரிக் கட்சிகள் நாற்பத்தியாறு ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன. இந்தத் தேர்தல் முடிவுகள் நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் அமைந்திருப்பதால் ஐக்கியத்தை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபடப் போவதாக அறிவித்த ஜனாதிபதி வக்லாப் ஹாவெல் தமது முயற்சியில் தோல்வியுற்றதையடுத்து பதவி விலகினார்.

சிவிக் ஜனநாயகக் கட்சியின் தலைவரும், முன்னாள் நிதி அமைச்சருமானகிளாஸ்ஸும், ஜனநாயக ஸ்லோவாக்கிய இயக்கத் தலைவர் மெசியருப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தனர்.

பொருளாதார சீர்திருத்தத்தை ஸ்லோவாக் மக்கள் எதிர்ப்பதாக தெரிவித்த மெசியர், செக், ஸ்லோவாக் என்னும் இரு குடியரசுகளும், தந்தம் சொந்த அரசியலமைப்பைக் கொண்டிருக்க வேண்டுமெனவும், ஸ்லோவாக் இன மக்களுக்கான ஜனாதிபதி தெரிவு செய்யப்பட இருக்கிறார் என்றும் அறிவித்தார். கண்ணிவெடியைப் போன்றது எனப் பேச்சுவார்த்தையை வர்ணித்த கிளாஸ் செக்கோஸ்லாவாக்கியா தொடர்ந்தும் ஒன்றுபட்டு இருக்க மெசியருடன் பேரம் பேச வேண்டியிருப்பதாகவும், ஆனால் அதற்குப் போதுமான அவகாசம் இல்லாமல் இருப்பதாகவும், தெரிவித்தபடியே பேச்சுக்களை தொடர்ந்து நடத்தினார். செக்கோஸ்லாவாக்கியா சொத்து மற்றும் வளங்கள் பகிரப்படுவது தொடர்பாகவும். அந்நாட்டின் கடன்களை ஈடுசெய்வது சம்பந்தமாகவும் சில கருத்து மோதல்கள் ஏற்பட்டபோதும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. ஈற்றில் கடந்த வியாழனன்று முதல் தனித்தனி நாடுகளாக அவை பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.




ஒரு தேசிய இனம் பிரிந்து சென்று புதிய அரசு ஒன்றை உருவாக்குவதற்கு அதன் முன்னைய கட்டுமானத்தில் இருக்கும் பெரும்பான்மையின மக்கள் ஆதரவு காட்ட வேண்டும் என்ற அர்த்தமற்ற வாதம் இதன் மூலம் தவிடு பொடியாக்கப்பட்டுள்ளது. செக். மக்கள் பெரும்பான்மையினர்) ஸ்லோவாக்கியபிரிந்து செல்வதை விரும்பாதபோதும் பெருந்தன்மையுடன் ஸ்லோவாக்கியாவின் சுய நிர்ணய உரிமைக்கு மதிப்பளித்துள்ளனர். இதனால் இரத்தம் சிந்துதலும், மனித உயிரிழப்புமின்றி இரு புதிய நாடுகள் உருவாக்கப்படுதல் சாத்தியமாகியுள்ளது. சர்வதேச சமூகமும் கூடசெக்கோஸ்லாவாக்கியாவின் பிரிவினையை ஏற்றுக் கொண்டதன் வாயிலாக இருதரப்பினரும் சம்மதம் கூற வேண்டும் என்ற அசட்டுத்தனத்தை நிராகரித்துள்ளன செக்கோஸ்லாவாக்கியா சமஷ்டி என்னும் நாடு இப்போது வழக்கொழிந்து போய் விட்டது. கொர்பசேவ்வின் பதவி இறப்பையடுத்து சோவியத்யூனியன் இயற்கை மரணத்தை தழுவிக்கொள்ள பல புதிய அரசுகள் முகிழ்த்து எழுந்ததைப் போல செக்கோஸ்லாவாக்கியாவிலும் இரண்டு தேசங்கள் உருவாகிவிட்டன.

அயோத்தியா விவகாரம்

# நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக முஸ்லிம்கள் போர்க்கொடி

(டில்லி)

அயோத்தியில் பாபர் மசூதி ... வில் ஆயிரக்கணக்கான இந்துக்கள் கோயிலின் அருகே ... வித்தனர். ஆனால் முஸ்லிம்கள் இந்தத் தீர்ப்புக் குறித்து ...

## பாரதிய ஜனதா-அ. தி. மு. க. இரகசிய உடன்பாடு இல்லை

--எம். எல். வோரா கருத்து

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், பாரதிய ஜனதாக் கட்சிக்கும் இடையே இரகசிய உறவு ... காரி எம். எல் வோரா மறுத்துள்ளார்.

சென்னையில் அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்

யும். இன்று நாட்டிற்குத் தேவையானது வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குச் சமாதான தீர்வு ஒன்றே. இதனைச் செய்வதன் மூலமே நாடு துண்டாடப் படுவதைத் தடுக்க முடியும்' என்பதும், ஆயுதங்கள் மூலம் சமாதானம் நிலை நாட்டப்பட்டதாக வரலாறு இல்லை என்பதும் முக்கியமானவையாகும்.

ஆனால், திரு. பிரேமதாசாவின் போதனைக்கும், அவரது நடவடிக்கைகளுக்கும் இடையில் எப்பொழுதுமே பாரிய வேறுபாடுகள் காணப்படுவதுண்டு. நாளாந்தம் ஏதோ ஒரு விகாரைக்குச் செல்வதும், அங்கு நடக்கும் சமய வைபவங்களில் கலந்து கொள்வதும், அங்கு கூடியுள்ளவர்களுக்கு புத்தரின் போதனையுடன் இணைந்து அரசியல் போதனை செய்வதும் திரு. பிரேமதாசாவின் நாளாந்த வேலைகளில் ஒன்றாக மாறி விட்டது.

ஆனால். திரு. பிரேமதாசாவின் ஆட்சி நிலவிய காலத்தில்தான் என்றுமில்லாதவாறு பெரும் தொகையானோர் அரசபடைகளினால் கொல்லப்பட்டும் கடத்திச் செல்லப்பட்டும் உள்ளனர். இன்றும் காணாமற் போவோர் தொகை பெரியளவில் குறைந்து விட்டதாக இல்லை. இது திரு. பிரேமதாசாவின் போதனைக்கும் நடவடிக்கைக்குமான இடைவெளியைக் காட்டுவதற்குப் போதுமானதாகும்.

இந்த வகையிலேயே தற்பொழுது சமாதானம் குறித்த பிரேமதாசாவின் போதனையையும் நோக்க வேண்டும். சமாதானம் இன்றேல் நாடு பிரிந்து போவதைத் தடுக்க முடியாது எனக் கூறும் ஜனாதிபதி பிரேமதாசா, முப்படைகளின் தளபதி மட்டுமல்ல, வடக்கு - கிழக்குப் பகுதியில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் பாதுகாப்புக்கவுன்சிலின் தலைவரும் ஆகும். கடந்த இரண்டரை வருடமாகப் போருக்கான உத்தரவுகளை அவரே வழங்கிவருகிறார்.

இதேவேளை, ஆயுதங்களினால், சமாதானத்தை எங்கும் உருவாக்கியதில்லை எனக் கூறும் ஜனாதிபதி பிரேமதாசா இதுவரையில் இல்லாதவாறு பெருந்தொகை இராணுவ தளபாட இறக்குமதிக்கு கடந்த வருடத்தில் அனுமதி வழங்கியுள்ளார். இந்நிலையில் அவரது போதனை வெறும் மேடைப்பேச்சு என்பதை வெளிக்காட்டுவதாகவே உள்ளது. அதாவது சிறிலங்கா ஜனாதிபதி சமாதானத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு மறுபுறம் யுத்தத்திற்கான தயாரிப்பில் ஈடுபட்டுவருகின்றார்.

ஆனால், சிறிலங்கா ஜனாதிபதியின் சொல்லுக்கும், செயலுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படினும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றைக் காண முடியாது என்பதை அவர் பேச்சளவில் தானும் ஒத்துக் கொண்டமை- அனுபவத்தால் ஏற்பட்ட படிப்பினையாகவேஇருக்க முடியும். இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு கண்டுவிட முடியும் என எண்ணி இதுவரை ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவித்த சிறிலங்கா ஜனாதிபதிக்கும், சிங்களப் பேரினவாதிகளுக்கும் அது சாத்தியமற்ற தொன்றென உணர்த்துவதில் விடுதலைப் புலிகள் வெற்றி கண்டுள்ளனர் எனலாம்.

---

சிகள் முன்னேற்றகரமாக நகர்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்படும் இவ்வேளையில்- இருபதாம் நூற்றாண்டு இறுதியில் ஒன்றிணைந்த ஐரோப்பா குதூகலமானதாக விளங்கும் என்று ஆருடம் கூறப்படும் அத்தருணத்தில்- பிரிட்டன், நடந்த தேர்தலின் போது மேற்கில் பெரும்பான்மையாக வாழும் செக் இன மக்கள் பொருளாதார சீர்திருத்தத்திற்கும், சந்தைப் பொருளாதார அமைப்பிற்கும் ஆதரவாகப் பெருமளவில் வாக்களித்தனர். இதனால் சிவிக் உதிரிக் கட்சிகள் நாற்பதிற் யாறு ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன. இந்தத் தேர்தல் முடிவுகள் நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் அமைந்திருப்பதால் ஐக்கியத்தை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபடப் போவதாக அறி ஸ்லாவாக்கியா தொடர்ந்தும் ஒன்றுபட்டு இருக்க மெசியருடன் பேரம் பேச வேண்டியிருப்பதாகவும், ஆனால் அதற்குப் போதுமான அவகாசம் இல்லாமல் இருப்பதாகவும், தெரிவித்தபடியே பேச்சுக்களை தொடர்ந்து நடத்தி பதவி இறப்பையடுத்து சோவியத்யூனியன் இயற்கை மரணத்தை தழுவிக்கொள்ள பல புதிய அரசுகள் முகிழ்த்து எழுந்ததைப் போல செக்கோஸ்லாவாக்கியாவிலும் இரண்டு தேசங்கள் உருவாகிவிட்டன.

---

அயோத்தியா விவகாரம்

# நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக முஸ்லிம்கள் போர்க்கொடி

(டில்லி)

அயோத்தியில் பாபர் மசூதி தகர்க்கப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்ட பாலராமர்கோயிலில் நேற்று முன்தினம்பக்தர்கள் வழிபட்டனர். காலை சுமார் ஒன்பதே முக்கால் மணியளவில் ஆயிரக்கணக்கான இந்துக்கள் கோயிலின் அருகே சென்று வழிபாடு செய்தனர்.

அலகபாத் நீதிமன்றம் வழிபடுவதற்கு அனுமதி வழங்கியதால் அயோத்தியில் வழும் இந்துக்கள் பெருமகிழ்ச்சி தெரிவித்தனர். ஆனால் முஸ்லிம்கள் இந்தத் தீர்ப்புக் குறித்து ஆத்திரமடைந்திருப்பதோடு பாரபட்சமானது என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்துக்கு மேன் முறையீடு செய்யப்போவதாக முஸ்லிம் அமைப்புகள் தெரிவித்துள்ளன. அயோத்தி உள்ளூராட்சி அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், பள்ளி வாசல் இருந்த காலத்தில் அங்கு இஸ்லாமியர் சென்று வழிபடவில்லை என்றார். இந்துக்கள் தான் வழிபட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## முதலமைச்சர்களுடன் மாநில அரசுகள் கலைப்பு சரத்து பற்றிப் பேசப்படும்

– சவான் அறிவிப்பு

[டில்லி]

இந்திய அரசியலமைப்பின் 356 வது சரத்து பற்றி விவாதிக்க எல்லா மாநில முதல்வர்களையும் உள்ளடக்கிய கலந்தாலோசனைக் கூட்டம் ஒன்று விரைவில் கூட்டப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

புதுடில்லியில், நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், அயோத்தியா சம்பவங்கள் பற்றிய முழுவிபர அறிக்கை ஒன்றை உள்துறை அமைச்சு தயாரித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

## சமய சார்பற்ற சக்திகள் ஒன்றிணைவது அவசியம்

வி. பி. சிங்

(டில்லி)

கொந்தளிப்பு மிகுந்துள்ள இன்றைய சூழ்நிலையில் வகுப்புவாத சக்திகளைஎதிர்த்துப் போரிடுவதற்குரிய ஒரே வழி சமய சார்பற்ற சக்திகள் ஒன்றிணைவதுதான் என்று ஜனதாதள் தலைவரும் முன்னாள் பிரதமருமான வி. பி. சிங் கூறியுள்ளார்.

ஜனதா தள் கட்சியின் செயற்குழுக் கூட்டம் புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது அதில் பேசிய வி. பி. சிங் இவ்வாறு குறிப்பிட்டார் இத் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் இந்தியா முழுவதிலுமிருந்து சுமார் நூறு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடும், மறுவாழ்வும்

பங்களாதேஷ் கட்சிகள் கோரிக்கை

(டாக்கா)

அயோத்தியா சம்பவங்களைத் தொடர்ந்து பங்களாதேஷில் நடந்தகலவரங்களால் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினருக்கு நஷ்டஈடும் மறுவாழ்வும் அளிக்கப்படவேண்டுமென பங்களாதேச அரசிடம் அனைத்துக் கட்சிகளினதும் அமைதிப் பேரணி ஒன்று வலியுறுத்தியுள்ளது.

கடந்தவெள்ளிகிழமைடாக்காவில் நடைபெற்றஇப் பேரணியில் பேசியபலரும் இடிக்கப்பட்ட ஆலயங்களும் மற்றும் மதவழிபாட்டுத் தலங்களும் மீண்டும் புனரமைக்கப்பட வேண்டும் எனக்கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இந்திய ராணுவ விமானம் விழுந்து நொருங்கியது

விசாக பட்டினத்திலிருந்து நேற்றுமுன்தினம்பிற்பகல்2 05 மணியளவில் புறப்பட்ட இந்திய இராணுவ விமானமொன்று காணாமற்போய்பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது பிற்பகல் மூன்றேகால் மணிக்கு கல்கத்தாவில் தரையிறங்க வேண்டிய இவ்விமானம் 2.35 மணிக்குப் பின்னர் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்து காணாமற் போனது.

கரையோர காவற்படைப் பிரிவுக்குச் சொந்தமான இவ் விமானம் பின்னர் கட்டார் அருகே தரையில் வீழ்ந்து கிடக்கக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. விமானத்தில் பயணம் செய்த இருவர் காயங்களுடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். மற்றும் நால்வரைத் தேடும் பணி தொடர்ந்து வருகின்றது.

## பாரதிய ஜனதா- அ. தி. மு. க. இரகசிய உடன்பாடு இல்லை

--எம். எல். வோரா கருத்து

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், பாரதிய ஜனதாக் கட்சிக்கும் இடையே இரகசிய உறவு எட்டப்பட்டிருப்பதாக வெளிவந்திருக்கும் செய்திகளை காங்கிரஸ் கட்சியின் தமிழக மாநில தேர்தல் அதிகாரி எம். எல் வோரா மறுத்துள்ளார்.

சென்னையில் அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறுகையில் இத்தகைய செய்தி முற்றிலும் ஆதாரமற்ற தொன்றாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழகத்தின் பழனி உட்பட மூன்று தொகுதிக்கு தேர்தல்

(டில்லி)

தமிழ்நாட்டின் பழனி மக்களவைத் தேர்தல் தொகுதிக்கும், கேரளாவின் ஒத்தப்பாலம் தேர்தல் தொகுதிக்கும் பஞ்சாபின் ஜலந்தர் தேர்தல் தொகுதிக்கும் அடுத்த மாதம் பதினைந்தாம் திகதியன்று இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது பழனி தேர்தல் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சேனாபதிக் கவுண்டர் காலமானதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நடைபெறவிருக்கும் இவ் இடைத் தேர்தல் தமிழகத்தை பொறுத்தவரையில் மிகுந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இவ் இடைத் தேர்தல் அ. தி. மு. க - காங்கிரஸ் கூட்டணி நீடிக்குமா என்பதற்கும் தமிழகத்தின் எதிர்கால அரசியல் போக்கைத் தீர்மானிக்கும் ஒன்றாகவும் இருக்கும் எனவும் அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

இந்த மக்களவை தொகுதிக்கான இடைத்தேர்தல்களுடன் சேர்த்து மேகாலயா, திரிபுரா, நாகலாந்து மாநிலங்களின் சட்டப்பேரவைக்ளுக்கான தேர்தலும் நடத்தப்படவுள்ளன.

வேட்பு மனுத்தாக்கல் இம் மாதம் பன்னிரண்டாம் திகதி தொடங்கும் எனவும், இருபதாம்திகதி இறுதிநாளாகஇருக்கும் எனவும் இருபத்தியிரண்டாம் திகதியன்று வேட்பாளர்களின் இறுதி விபரம் வெளியிடப்படும் எனவும், அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி தேர்தல் நடத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய நாடுகளுக்கு அமெரிக்கா அங்கீகாரம்

(வாஷிங்டன்)

புதிதாக சுதந்திரப் பிரகடனம் செய்துள்ள செக் மற்றும் ஸ்லோவாக் குடியரசுகளுக்கு அமெரிக்கா அங்கீகாரம் அளித்துள்ளது. அதிபர் ஜோர்ஜ் புஷ் இந்த அங்கீகாரத்தை வெளியிட்டிருப்பதுடன் முழு அளவிலான ராஜீயத்துறை உறவுகளும் ஏற்படுத்தப்படுமெனவும் அறிவித்து இருக்கின்றார். மேலும் பரஸ்பரம் பயனளிக்கக் கூடிய இருதரப்பு உறவுகளை இரு குடியரசுகளோடும் ஏற்படுத்த அமெரிக்கா எதிர்நோக்கியிருப்பதாக அதிபர் மாளிகையின் அறிவிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## புதிய அதிபர் தெரிவு

ஆப்கானிஸ்தானின் புதிய அதிபராக தெரிவு செய்யப்பட்டுள்ள புர்கானுதீன் ரபானி நாளை செவ்வாயன்று பதவி ஏற்க இருப்பதாக காபூலில் அதிகார பூர்வ வட்டாரங்கள் அறிவித்துள்ளன

ஈழநாதம்

# இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய ஆயுதக் குறைப்பு

## ஒப்பந்தம் குறித்து யெல்சின் கருத்து

[மொஸ்கோ]

அணு ஆயுதப்பரிகரண ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும், ரஷ்ய ஜனாதிபதி பொரிஷ் ஜெல்சினும் மொஸ்கோவில் நேற்று கையொப்பம் இட்டனர். இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய ஆயுதக் குறைப்பு இது'' என்று ரஷ்ய ஜனாதிபதி பொரிஷ் யெல்சின் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஸ்ரட்-2 எனப்படும் இந்த ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் செயற்படுத்தப்பட்டால் இரு நாடுகளும் தம்மிடமுள்ள அணு ஆயுதங்களை அடுத்த பத்தாண்டுகளில் மூன்றில் இரண்டு பங்காக குறைக்கும். அதாவது அமெரிக்காவிடமும் ரஷ்யாவிடமும் உள்ள அணு ஆயுதங்கள் முறையே 3500 ஆகவும், 3000 ஆகவும் குறைக்கப்படும் ஆனால் இந்த ஒப்பந்தம் அமெரிக்க செனேற் மற்றும் ரஷ்ய பாராளுமன்றங்களில் ஒப்புதலைப் பெற வேண்டும்.

இதே வேளை, இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் மொஸ்கோவில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.


மிக அபாயகரமான ஆயுதங்களும் இவ் ஒப்பந்தத்தின் கீழ் அழிக்கப்படும், சரித்திரமுக்கியத்துவம்வாய்ந்த இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் நேற்று முன்தினம் மொஸ்கோ சென்றிருந்தார். புதிய ஜனாதிபதி பிலிகிளின்டனிடம் பதவியை ஒப்படைக்க சில வாரங்கள் மட்டும் உள்ள நிலையில் ஜோர்ஜ்புஷ் கைச்சாத்திட்ட மிக முக்கிய ஒப்பந்தம் இது வாகும்.

# ராஜீவுக்கு சிலை திறப்பு

## ஜெயலலிதாவுக்கு அழைப்பு

சென்னையில் தற்போது அமைக்கப்பட்டு வரும் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆளுயர சிலை திறப்பு விழா இம்மாதம் நடைபெறும் எனவும், இவ் விழாவில் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கலந்து கொள்வார் எனவும், தமிழக காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் தமிழக காங்கிரஸ் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ் விழாவில் கலந்து கொள்ளும்படி மாநில முதல்வரும், அ. இ. அ. தி. மு. க. பொதுச் செயலருமான ஜெயலலிதாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



# இன்று பாடசாலைகள் ஆரம்பம்

(குருநகர்)

குடாநாட்டுப் பாடசாலைகள் பெரும்பாலானவை புதிய ஆண்டு கற்பித்தலுக்காக இன்று திறக்கப்படுகின்றன.

யாழ்-புனித பத்திரிசியார் கல்லூரி எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகுமென அறியப்படுகிறது.

அரச உதவியுடன் திருச்சபை மற்றும் பொதுச்சபைகள் நடாத்தும் பாடசாலைகள் வெவ்வேறு திகதிகளில் புதிய கல்வியாண்டில் கற்பித்தலுக்காக திறக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (21)

# தொகுப்பு நூல் பெறலாம்

1992 ஆம் ஆண்டு யாழ். கல்வித்திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் தரம் ஒன்று, தரம் இரண்டு, தரம் மூன்று அதிபர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு பயிற்சி நெறியை மேற்கொண்ட அதிபர்களுக்கு கருத்துரைத் தொகுப்பு நூல்கள் வழங்கப்படவுள்ளன.

இத் தொகுப்பு நூல்களை சம்பந்தப்பட்ட அதிபர்கள் முகாமைத்துவ நிலையத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. புலேந்திரனின் செய்திக்குறிப் பொன்று கேட்டுக் கொள்கின்றது.

# தஞ்சை பெரிய கோவிலில் விநாயகர் சிலை மாயம்

(சென்னை)

தஞ்சாவூர் பெருவுடையார் கோவிலில் இருந்து கணேசர் விக்கிரகம் சென்ற வெள்ளியன்று களவு போய் விட்டது. வெள்ளியன்று காலையில் இதற்கும் பூசை நடைபெற்றதாகவும் மாலையில் இது காணப்படவில்லை என்றும் கோவில் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

# இந்தியாவின் அரசியல் யாப்புபற்றிஆராய மாநில முதலமைச்சர் கூட்டம்

[டில்லி]

இந்திய அரசியல் யாப்பின் 356வது பிரிவுபற்றியும், அதில் உள்ள குறைகள் பற்றியும் ஆலோசனை கலக்க மாநில முதலமைச்சர்கள் கூட்டம் விரைவில் நடத்தப்படும் என்று உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்திருக்கிறார்.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் செய்தியாளரிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

மத்திய அரசு வட இந்தியாவில் அதிகாரத்திலிருந்த பாரதிய ஜனதாக் கட்சி மாநில அரசுகள் நான்கினை இந்த 356 வது பிரிவைப் பயன்படுத்தியே கலைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

குடாநாட்டில் மாத்திரம்தான் தொடர்ந்து சேவையில் ஈடுபடும் வாய்ப்பு உண்டு. இது சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இரு கப்பல்களும் உணவுப் பொருள்களை வழமை போல் ஏற்றிவரும் ...

# தீர்வை முன்வைத்தால் எதிர்க்க மாட்டோம்

## - சிறி சுமங்கள தேரோ

[கொழும்பு]

அரசியல்வாதிகள் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு சமாதான தீர்வை முன்வைத்தால் அது சகல மக்களுக்கும் நன்மை பயக்குமானால் அத் தீர்வுக்கு எந்த ஒரு எதிர்ப்பையும் மதகுருமார்கள் காட்டமாட்டார்கள் எனவும், மத தலைவர்களுக்கு மதிப்பளிப்பதாக அரசு கூறுவது ஒரு ஏமாற்று என்றும் ரஜ்கிரி விகாராதிபதி வண. இனாமலுவே சிறி சுமங்கள தேரோ தெரிவித்தார்.

ஜாஎலயில் கடந்த சனியன்று நடைபெற்ற சர்வமத கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார் இந்த கூட்டத்திற்கு ஆரம்பத்தில் ஒலி பெருக்கிக்கான அனுமதிக்கு பொலிஸார் மறுத்ததை அங்கு உரையாற்றிய கிறிஸ்தவ மதகுரு வண. ஒஸ்பட் எட்வர் தெரிவித்தார். இது ஒரு அரசியல் மேடையல்ல. இது நாட்டுக்கான ஒரு மத வைபவமே. இதில் நான்குமத தலைவர்களும் ஒற்றுமையாக செயல்பட இருப்பதாகவும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய கோட்டே நாகவிகாராதிபதி அதிவண. மாதுலுவாவே சோபித தேரோ உரையாற்றுகையில் நாட்டில் நிம்மதி அற்றுப்போயுள்ளது. மக்களும் நிம்மதி இல்லாது சீவிக்கின்றார்கள். அரசியல்வாதிகளின் கைப்பொம்மையாக மக்கள் மாற்றப்பட்டமையாலேயே இந்நிலை ஏற்பட்டது. மக்கள் மரணத்தின் விளிம்பில் சிக்கியுள்ளார்கள். இது மிகுந்த மனவருத்தத்தை தருகின்றது.

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு அரசியல்வாதிகள சுயநலத்தால் கிடைக்காததினால் பிரச்சினை நீண்டு கொண்டு செல்கின்றது என கூறினார்.

# அகதி முகாம்களில் மலசலகூடம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் உள்ள வீடுகளுக்கு சுகாதார வசதி கருதி 75 மலசலகூடங்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் அமைத்துக் கொடுத்துள்ளனர். (42)

# கிராம சேவையாளர் கலந்துரையாடல் நிகழ்ச்சி

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த கிராமசேவகர்களுக்கான கலந்துரையாடல்கள் நாளை செவ்வாயன்று சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடல்களில் சம்பந்தப்பட்ட கிராமசேவகர்கள் அனைவரும் தவறாது சமுகம் அளிக்கும்படி விடுதலைப்புலிகளின் அரசியல்நிர்வாகப் பொறுப்பாளர் வேண்கோள் விடுத்துள்ளார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு மு. ப. 10-00 மணி.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பி. ப. 1-00 மணி.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மு. ப. 10-00 மணி.

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பி. ப. 1-00 மணி.

# எறிகணை வீச்சு

[யாழ்ப்பாணம்]

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மக்கள் வாழ்விடங்களை நோக்கி கடந்த இரவு பலத்த எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ் எறிகணைகள் ஏழாலை, ஈவினை, புன்னாலைக் கட்டுவன், கோப்பாய் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக தெரிய வருகிறது. ஆயினும் இவற்றால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை,

# பேசாலை மருத்துவ மனையில் நோயாளர் அதிகரிப்பு

(மன்னார்)

பேசாலை வைத்தியசாலையில் மருந்துகள் இன்றி நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். அகதி முகாம்களிலும் அப்பகுதிகளிலும் வாழும் மக்கள் மத்தியில் மலேரியா காய்ச்சல் பரவி வருவதினால் பேசாலை வைத்தியசாலைக்கு நோயாளர் படையெடுப்பதை காணமுடிகிறது. இங்கு நாளாந்தம் நோயாளரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு கட்டில்வசதி இல்லாமையால் தரையில் படுக்க அனுமதிக்கப்படுகின்றனர். இதேவேளை அகதிமுகாம்களில் வாழும் நோயாளர்கள் பணம் கொடுத்து வெளியில் மருந்துகளை வாங்கமுடியாது திணறுகின்றனர்.

அத்துடன் வைத்தியசாலைத் தேவைகள் இதன் ஊழியர்கள் தொடர்பான குறைகளை வவுனியா பிராந்திய சுகாதாரசேவை அலுவலகத்திற்கு தெரிவித்தும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இச் சம்பவங்கள் குறித்து உதவி அரச அதிபருக்கு புகாரிடப்பட்டுள்ளது.

# மந்திகைப் பகுதியில் திருட்டு அதிகரிப்பு

(வடமராட்சி)

மந்திகை புலோலிப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த முதலாம் திகதி புலோலி தெற்கில் ஆட்கள் இல்லாத வீடொன்றிலிருந்து புடவைகள், மணிக்கூடுப் வானொலிப் பெட்டி ஆகியன பகல் நேரத்தில் திருடப்பட்டுள்ளது.

மற்றும் அன்றிரவு மந்திகைச் சந்தியில் இரண்டு கடைகளில் திருட்டு நடைபெற்றுள்ளது. விற்பனை நிலையம் ஒன்றிலிருந்து 7 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும், துவிச்சக்கர வண்டி திருத்தும் கடை ஒன்றிலிருந்து உபகரணங்கள் சிலவும் திருடப்பட்டுள்ளன. (யோ)

பயணிகள்

தாகவும் தெரிய வருகின்றது.

மேலும், புகையிலைச் சிப்பத்...

# பண்டத்தரிப்பு பகுதியில்

இந்தியாவின்

புகார் செய்யப்பட்டுள்ளது.

## அரசியல் யாப்புபற்றி ஆராய மாநில முதலமைச்சர் கூட்டம்

[டில்லி]

இந்திய அரசியல் யாப்பின் 356வது பிரிவுபற்றியும், அதில் உள்ள குறைகள் பற்றியும் ஆலோசனை கலக்க மாநில முதலமைச்சர்கள் கூட்டம் விரைவில் நடத்தப்படும் என்று உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் தெரிவித்திருக்கிறார்

புதுடில்லியில் நேற்றுமுன் தினம் செய்தியாளரிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

மத்திய அரசு வட இந்தியாவில் அதிகாரத்திலிருந்த பாரதிய ஜனதாக் கட்சி மாநில அரசுகள் நான்கினை இந்த 356 வது பிரிவைப் பயன்படுத்தியே கலைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### விடைத்தாள்

டுப் பரீட்சை நிலையங்களின் விடைத் தாள்கள் திருத்துவதற்கான பூர்வாங்கவேலைகள் கூட இதுவரை ஆரம்பிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### குடாநாட்டில்

மாத்திரம்தான் தொடர்ந்து சேவையில் ஈடுபடும் வாய்ப்பு உண்டு. இது சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இரு கப்பல்களும் உணவுப் பொருள்களை வழமை போல் ஏற்றிவரும் என்பதில் சந்தேகம். இந்த இரு கப்பல்களும் சேவையில் ஈடுபடுத்தப்படா விட்டால் குமணவால் சிறிதளவு உணவுப் பொருள்களைத் தான் கொண்டு வர முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நோயாளர் அதிகரிப்பு

(மன்னார்)

பேசாலை வைத்தியசாலையில் மருந்துகள் இன்றி நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். அகதி முகாம்களிலும் அப்பகுதிகளிலும் வாழும் மக்கள் மத்தியில் மலேரியா காய்ச்சல் பரவி வருவதினால் பேசாலை வைத்தியசாலைக்கு நோயாளர் படையெடுப்பதை காணமுடிகிறது. இங்கு நாளாந்தம் நோயாளரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இவ்வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு கட்டில்வசதி இல்லாமையால் தரையில் படுக்க அனுமதிக்கப்படுகின்றனர். இதேவேளை அகதிமுகாம்களில் வாழும் நோயாளர்கள் பணம் கொடுத்து வெளியில் மருந்துகளை வாங்கமுடியாது திணறுகின்றனர்.

அத்துடன் வைத்தியசாலைத் தேவைகள் அதன் ஊழியர்கள் தொடர்பான குறைகளை வவுனியா பிராந்திய சுகாதாரசேவை அலுவலகத்திற்கு தெரிவித்தும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை.

இச் சம்பவங்கள் குறித்து உதவி அரச அதிபருக்கு புகாரிடப்பட்டுள்ளது.

### பயணிகள்

தாகவும் தெரிய வருகின்றது.

மேலும், புகையிலைச் சிப்பத்துடன் சென்ற படகொன்றும் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானதாகவும், கடலில் அப்படகு தீயிடப்பட்டதாகவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

களில் கடந்த சில தினங்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த முதலாம் திகதி புலோலி தெற்கில் ஆட்கள் இல்லாத வீடொன்றிலிருந்து புடவைகள், மணிக்கூடுப் வானொலிப் பெட்டி ஆகியயன பகல் நேரத்தில் திருடப்பட்டுள்ளது.

மற்றும் அன்றிரவு மந்திகைச் சந்தியில் இரண்டு கடைகளில் திருட்டு நடைபெற்றுள்ளது. விற்பனை நிலையம் ஒன்றிலிருந்து 7 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும், துவிச்சக்கர வண்டி திருத்தும் கடை ஒன்றிலிருந்து உபகரணங்கள் சிலவும் திருடப்பட்டுள்ளன.

(யோ)

## பண்டத்தரிப்பு பகுதியில் பாடசாலை தளபாடம் திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் மீண்டும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு பகுதி மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி வேறு இடங்களில் தங்கியிருப்பது தெரிந்ததே.

இச்சந்தர்ப்பத்தினைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி சில உள்ளூர் திருடர்கள் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் தளபாடங்களை திருடிச் சென்றுள்ளதாக, புகார் செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் இப்பாடசாலை இராணுவ எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்திருந்தது தெரிந்தது. தற்போது இப்பாடசாலையில் இருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகள் வாங்குகள் என்பன களவாடப்பட்டுள்ளன.

### குமண

பொருள்கள் இறக்கும் வேலைகள் இன்றுடன் முடிவடைந்ததும் இக் கப்பல் புறப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரிஒருவர் நாளை கப்பல் மூலம் யாழ். வரும் போது யாழ் மாவட்ட உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை எடுத்து வரக்கூடும் எனவும் தெரிய வருகிறது. (யோ)



## திருமதி ஞானமணி தர்மலிங்கம்

பிறப்பு:01-09-1920 இறப்பு:17-12-1991

திதி: 04-01 1993

அன்புடன் நினைவு கூரும்

| | |
|---|---|
| 'திருவேர் அகம்' | கணவர், பிள்ளைகள், |
| மாவீரர் வீதி, | மருமக்கள், சகோதரர்கள், |
| கோண்டாவில் வடக்கு, | பேரப்பிள்ளைகள். |
| கோண்டாவில் | |

(3903

## 2-ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத்திதியும்

வீர ஜனனம்
05
|
08
|
1974



வீரச்சாவு
28
|
12
|
1990

## வீரவேங்கை பாலா

[இராசையா தவநேசன்]

உன் வீரம் கண்டு
ஈராண்டு சென்றதடா
ஈழத்தில் உன்போன்றோர்
பலர் வீரம் கொண்டு
தமிழீழம் காண்பாரடா!

நாவற்காடு,
அச்சுவேலி.

குடும்பத்தினர், உறவினர்,
நண்பர்கள்

(3881)

## 2-ம் ஆண்டு நினைவலைகள்





**கப்டன் அமலன்**
(விஜயசிங்கம்
தம்புத்துரைச்சாமி)

வீரவேங்கை
**யேக்கா**
(சீதாலட்சுமி தம்புத்துரைச்சாமி)

(சங்குவத்தை - வீரமாணிக்கம் தேவன்துறை - மயிலிட்டி)

| | | | |
|---|---|---|---|
| வீரஜனனம்:- | 10 - 03 - 1969 | வீரஜனனம்:- | 23 - 06 - 1970 |
| வீரச்சாவு :- | 04 - 01 - 1991 | வீரச்சாவு:- | 30 - 11 - 1990 |

அமலா! நீ மடிந்து விடவில்லை
எங்களுடன் தான் இருக்கின்றாய்
நீ மடிந்ததும் மண்ணுக்காகவே
நாம் போராடுவதும் மண்ணுக்காகவே
எங்கள் அன்பு யேக்காவே!
நீ எங்களை மறந்து விட்டாயோ
இரண்டு ஆண்டுகள் சென்று விட்டது
ஆனால் நம் கண்ணீர் ஓயவில்லை
காற்றும் புயலும் கூட ஓயலாம்
ஆனால் உங்களது இலட்சியங்கள் ஓய்வதில்லை

வீரக்கொடி வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி

[3890]

- குடும்பத்தினர்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

03.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7499

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

26-3177, 26-8839, 27-5302, 28-9633, 27-5197,
27-9416, 42-2323, 27-2034, 24-2655, 26-0382,
28-2049, 43-0517, 26-4727, 40-7584, 27-1541,
24-2024, 42-2364, 28-3735, 26-2585, 41-1799,
24-4908, 42-2355, 28-6640.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்,

27-2143, 41-9663, 41-0534, 26-5351, 28-4367,
26-6984, 41-2479, 42-4126, 41-4194, 24-5461,
42-3239, 24-7225, 24-6431, 26 5405, 26-3628,
28-6748, 27-6741, 20-3089, 26-3784, 26-2108,
26-2391, 42-9326, 28-3429, 21-5178, 27-9756,
24-6350, 27-6887, 26-2297.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதப்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.